# சுதேச மருத்துவத்துறை அமைச்சு

# செயலாற்றுகை அறிக்கை 2013

# கௌரவ சுதேச மருத்துவத்துறை அமைச்சரின் செய்தி



மனிதனின் ஆரம்பத்துடன், வைத்திய அறிவும் ஆரம்பித்துவிட்டது. ஒவ்வொரு வளர்ச்சி பெற்ற நாகரீக சமூகத்திலும், அவர்களின் சூழலுக்கு ஒத்திசைவானதொரு வைத்திய ஞானம் மற்றும் வைத்திய முறை இருந்தது என்பதற்கு வரலாறுகள் சான்றுபகர்கின்றன. இந்த வைத்திய முறைகளில் மிகப் பழமைவாய்ந்ததும், அழிவடையாது தற்போதுள்ளதுமான ஒரே வைத்திய முறை ஆயுர்வேதமாகும். இந்து நதிக்கரையில் பிறந்து கிட்டத்தட்ட ஐயாயிரம் ஆண்டுகளாக போசித்து வளர்ச்சியடைந்த இந்த ஆயுர்வேதமானது, தெற்காசியா முழுவதிலும் பரந்து ஆரோக்கியப் பாதுகாப்புக்கு வழிவகுத்தது.

புலஸ்தி இராவண காலத்தில் இருந்து வந்த இந்நாட்டுக்கே உரிய வைத்திய முறையொன்று உள்ளதுடன், இது புத்தர் காலத்தில், புத்த பிக்குகள் மூலம் பரவியதாகவும், வைத்திய அறிவு வளர்ச்சி அடைந்ததாகவும் வரலாறுகள் கூறுகின்றன.

இந்தமருத்துவக் கலையானது முன்னர் வாழையடி வாழையாக நாடெங்கிலும் பரவி சாதாரண மக்களிடத்திலும் ஒரு புரிதலுடன் திகழ்ந்துள்ளதென றொபட் நொக்ஸின் அறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது. இம்மருத்துவ முறைமை, வானவியல் மற்றும் சாந்தி கருமம் ஆகியவற்றால் போசிக்கப்பட்டதாக இலங்கையின் ஆயுர்வேதம் திகழ்ந்துள்ளது.

காலனித்துவ வாதிகளின் பிடியில் சிக்கிய தேசிய மரபுரிமைகளில் பாரம்பரிய மருத்துவமும் முக்கியமான ஒன்று. மேலைத்தேய சாயல்கொண்ட காலனித்துவ மனோநிலையில் எமது மருத்துவம் நாட்டு வைத்தியம் என்றும் நாட்டு வைத்தியர் என்றும் நிந்திக்கப்பட்டதனால் இவ்வைத்தியர்கள் முக்கியத்துவத்தினை இழந்தனர்.

1948 சுதந்திரம் பெற்றாலும் 1956 ஆம் ஆண்டிலேயே புதுப்பொழிவுடன் எழுந்துநிற்க முடிந்தது. அதனால் தான் தற்போதயை வளர்ச்சியை அடைய முடிந்தது. இன்று இந்த வைத்திய அறிவு பல்கலைக்கழக கல்வி வரை முன்னேரியுள்ளது. இன்றளவில் தொழில்சார் நிபுணர்கள், தொழில் சங்கங்கள், சிகிச்சை முறைகள், உற்பத்தி ஆலைகள் மற்றும் நாடுதழுவிய மருத்துவர்கள் அதற்கும் மேலாக அமைச்சரவை அமைச்சர் ஒருவரையும் கொண்டுள்ள வரையில் இத்துறை முன்னேறியுள்ளது. ஆயுர்வேதம், இலங்கை ஆயுர்வேதம், சித்த, யுனானி, ஹொமியோபதி போன்ற வைத்திய முறைகளையும் உள்ளடக்கி தேசிய சுகாதாரத்தினை பாதுகாப்பதற்கு பங்களிப்பினை நல்குகின்றது வரும் காலங்களில் முழு உலக சமூகத்த்திற்கும் அச்சுறுத்தலாக அமைவது தொற்றாத நோய்கள் என விஞ்ஞான ரீதியாக நிருபிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் பரவும் நோய்களின் பரவலானது, பரவும் நோய்களைத் தாணடியுள்ளது என உலக சுகாதார அமைப்பு அறிக்கை தெரிவிக்கின்றது. இந்த நோய்களைத் தடுப்பது மற்றும் சிகிட்சைகளை மேற்கொள்வதுடன், அதற்கான காரணியை இல்லாதொழிப்பது முக்கியமானதாகும். அதற்கு விவசாயத்திற்கு இரசாயப் பொருட்களை பயன்படுத்தாமல், சேதன விவசாய முறைகளைக் கையாண்டு தீங்கற்ற போசணையையும் பாதுகாப்பான சூழலையும் கொண்ட வாழ்க்கை முறைக்கு, அதற்கு அமைவான உபாயமார்க்கமாக சுதேச மற்றும் பரம்பரை வைத்திய முறை அமைகின்றது.

எங்கள் தாய் நாட்டை ஆசியாவில் ஆச்சரியமாக மாற்றுவதற்கு மகிந்த சிந்தனையை நிதர்சனமாக்குவதற்கு சுதேச வைத்தி முறையானது விசேட பங்களிப்பை வழங்கும்.

நோயற்ற சமூகம் மற்றும் நோயற்ற மனிதவலுவின் மூலம் தேசத்தின் சுகாதார பாதுகாப்புடன் முன்னேறிச் செல்வதற்கு, ஏகாதிபத்தியர்களினால் கவனிக்காது விடப்பட்ட பல்வேறு தரப்பினரினால் போற்றப்படும் சுதேச மருத்துவ முறை மற்றும் சுதேச வைத்தியர்களை சமூகத்தில் அங்கீகரிக்கப்பட்ட கௌரவ தொழில்புரிவோர்களாக உருவாக்குவதற்கு முயற்சி எடுப்பதே சுதேச மருத்துவத்துறை அமைச்சின் ஒரே குறிக்கோளாகும்.

**சாலிந்த திசாநாயக்க**
**சுதேச மருத்துவத்துறை அமைச்சர்**

## கௌரவ சுதேச மருத்துவத்துறை அமைச்சரின் செய்தி



நீண்ட ஆயுளுக்கு ஆரோக்கியத்திற்கு வழிவகுக்கும் கல்வியை நாங்கள் பெற்றுக்கொண்டது சுதேச மருத்துவக் கல்வியிடம் இருந்து என்பதில் மறுக்கமுடியாத உண்மையாகும். முற்காலத்தில் எங்கள் முன்னோர்கள் தங்கள் வாழ்க்கை முறையை அமைத்துக்கொண்டது விவசாயிகளாகவாகும். தங்களது ஜீவனோபயத்திற்கு நாளாந்தம் தேவைப்படும் மரக்கறிகள், பழங்கள் மற்றும் தானியங்கள் என்பவற்றை தங்கள் விவசாய நிலங்களிலேயே விளைவித்து விவசாய பசளைகளைப் பயன்படுத்தி விஷமற்ற உணவை உண்பதற்கு பழகியிருந்தனர். அன்று எங்கள் முப்பாட்டன்கள் ஆரோக்கியமான ஆரோக்கியத்ததைப் பெற்றவர்களாக இருந்தனர். ஆரோக்கியத்தை முன்னிறுத்தும் புத்தரின் வாக்கியங்கள் இதனை தெளிவாக்கும். முற்காலத்தில் இவ்வாறான வாழ்க்கை முறையே பலம் பொருந்திய பாராக்கிரமசாலிகளான துட்டகைமுனு போன்றோரை உருவாகியது என்பது தெளிவாகின்றது. அத்துடன், வரலாற்றைப் பின்னோக்கிப் பார்க்கும் பொழுது ராவணன் காலத்திலேயே எங்களுக்கு உரித்தான தனித்தன்மையான வைத்திய முறை இருந்தது என்பதற்கு சாட்சிகள் பல உள்ளன. சுதேச வைத்திய முறையானது இந்திய நாடடுக்கு உரியதாக இருந்த போதிலும் எங்கள் நாட்டுக்கே தனித்தன்மையானதாகும்.

இன்று தொழில்நுட்ப முன்னேற்றத்துடன் எங்கள் நாட்டு மக்களும் இரசாயன உணவு மற்றும் பானங்களுக்கு பழகியதனால் பல்வெறு நோய்களினால் சிரமப்படுகின்றனர். உதாரணமாக விரைவில் பரவும் சிறுநீரகப் பிரச்சனைகள், சிறுநீரகத்தில் கல் போன்ற நோய்கள் அதிகரிப்பதுடன், அதற்கான சிகிச்சை முறைகள் தொடர்பான பயிற்சிப்பட்டறைகள் நடாத்தப்பட்டு வருகின்றது. அதேபோல் உயர் குருதி அழுத்தம் மற்றும் நீரழிவு நோய்கள் சமூகத்தில் காணப்படும் பரவலான நோயாகும். இதற்கான சிகிச்சை முறை சுதேச வைத்திய முறையினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இன்று எங்கள் ஆயுர்வேத சிகிச்சை மையங்களுக்கு வரும் நோயாளிகள் குணமடைவது இதற்கு சான்றாகும். அனேகமாக எங்கள் உள்நாட்டு மரங்கள் மற்றும் அவறின் பாகங்களைப் பயன்படுத்தியே அனேக மருந்து வகைகள் உரிய நியமங்களில் தயாரிக்கப்படுகின்றது என்பதை குறிப்பிடுதல் வேண்டும்.

மூன்று தசாப்தகால யுத்தத்தினை முடிவுக்கு கொண்டுவந்த அதிமேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் மகிந்த சிந்தனையோடு இணைந்து நடாத்தப்படும் அபிவிருத்தி நிகழ்ச்சியின் மூலம் இது சர்வதேசத்திற்கு எடுத்துச்செல்லப்படும். அதன்படி, உள்நாட்டு மருத்தவத்தை சர்வதேசத்திற்கு கொண்டு செல்லும் வகையில் ஜப்பான், சீன நாடுகளில் உள்நாட்டு பஞ்சகா்ம மற்றும் ஆயுர்வேத மத்தியநிலையங்கள் ஜப்பான் மற்றும் சீன நாடுகளில் நிறுவுதல் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதுடன், எங்கள் உள்நாட்டு வைத்தியர்களுக்கு தொழில்வாய்ப்பினை பெற்றுக்கொடுக்கும் சந்தர்ப்பமாகவும் அமைந்தது. இது நாங்கள் பெற்றுக்கொண்ட வரப்பிரசாதமாகும். எங்கள் அனைத்து நடவடிக்கைகளுக்கு பக்கபலமாக அமைந்த மகிந்த சிந்தனை நிகழ்ச்சித்திட்டத்திற்கு முன்னோடியாக அமைந்த கௌரவ அதிமேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

**பண்டு பண்டாரநாயக்க**

சுதேச மருத்துவதறை பிரதி அமைச்சர்

## சுதேச மருத்துவத்துறை செயலாளரின் செய்தி



இராவணன் புலஸ்தி காலத்தின் இருந்து வருகின்ற பாரம்பரி வைத்திய முறை அன்றில் இருந்து இன்று வரை இலங்கை மக்களை நோயற்றவர்களாக பாதுகாப்பதற்கு தனது பங்களிப்பினை வழங்குகின்றது. இந்த வைத்திய முறையானது, இம்முறைமையானது வட இந்தியாவிலிருந்து பெற்றுக்கொண்ட ஆயுர்வேதம், தென் இந்தியாவிலிருந்து பெற்றுக்கொண்ட சித்த மருத்துவம் மற்றும் அராபியாவிலிருந்து பெற்றுக்கொண்ட யுனானி முறை ஆகியவற்றால் போசிக்கப்பட்டு மேன்மையடைந்துள்ளது. மேற்குலக வைத்திய முறை தவர்ந்த ஏனைய அனைத்து வைத்திய முறைகளின் ஊடாக பாரிய சேவையை வழங்கி நோயற்ற சமூகத்தை உருவாக்கும் நோக்குடன் சுதேச மருத்துவத்துறை அமைச்சு நிறுவப்பட்டுள்ளது.

அதிமேன்மைதங்கிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் மகிந்த சிந்தனை கொள்கை வெளியீட்டில் உள்ளவாறு, சுதேச வைத்திய முறையின் ஊடாக ஆரோக்கியம் மிக்க மக்களை உருவாக்குவதும், சுதேச வைத்திய முறையைப் பாதுகாப்பதும் மற்றும் அதனை அபிவிருத்தி செய்வதும், நாட்டுக்கு அவசியமான உள்நாட்டு மருந்துகளை எங்கள் நாட்டுக்குள்ளேயே உற்பத்தி செய்வதற்கு மூலிகைப் பயிர்ச் செய்கையை மேம்படுத்துவதம், மேற்குலக வைத்திய முறையை தவிர்த்து ஏனைய வைத்திய முறைகளை அபிவிருத்தி செய்வதுமே சுதேச மருத்துவத்துறை அமைச்சின் பிரதான நோக்கமாகும்.

இந்நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக இலங்கை ஆயுர்வேதத் திணைக்களம், இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம், ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனம், சுதேச மருத்துவத்துறை தொடர்பான தேசிய நிறுவனம், ஆயுர்வேத மருத்துவச் சபை மற்றும் ஹோமியோபதி மருத்துவச் சபை என்பன நிறுவப்பட்டுள்ளது.

அமைச்சு, இந்த நிறுவனங்களின் கீழ் சுதேச வைத்தி முறை மற்றும் மாற்று வைத்திய முறை மூலம் நோயாளிகளுக்கான சிகிச்சை சேவைகளையும், நோய் நிவாரண சேவைகளையும் செயற்படுத்துகின்றது. அத்துடன், சுதேச வைத்திய முறையின் அபிவிருத்திக்காக அறிவூட்டல், பல்வேறு நோய்களுக்குான சிகிச்சை பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல், மூலிகை வளர்ப்பு கருத்திட்டம், மூலிகை வளர்ப்பு அபிவிருத்தி போன்ற பல்வேறுபட்ட பணிகளில் ஈடுபடுகின்றது.

பாரம்பரிய சுதேச வைத்திய முறையைப் பாதுகாப்பதற்கும், அதனை எதிர்கால சந்ததிக்கு வழங்குவதற்கும், மிகச் சிறந்த சுகநல சேவைக்காக மூலிகைப் பாவனை மற்றும் அதன் பயன்பாடு தொடர்பான ஆராய்ச்சி, ஆய்வுகளை வலுவூட்டல், சர்வதேசத்தினால் தரப்படுத்தப்பட்ட முறைகளுக்கு அமைவாக மூலிகைகளை சர்வதேசத்திற்கு பரப்புதல் என்பவை தொடர்பாக அமைச்சு இப்போதும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றதுடன், எதிர்காலத்தில் அவற்றினை மேலும் வலுபபடுத்துவதற்கு பதிய கருத்திட்டங்களை தயாரிப்பதறிகு எதிர்பார்த்துள்ளது.

சுதேச மருத்துவத்துறை அமைச்சுடன் இணைந்த நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து சுதேச மருத்துவத்துறையினதும் மற்றும் ஹோமியோபதி மருத்துவத்துறையினதும் அபிவிருத்திக்கு மிகப்பெரிய பங்களிப்பை ஆற்றுவதுடன், 2014ம் ஆண்டு மேலும் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றேன்.

**லலித் கன்னங்கர,**
செயலாளர்
சுதேச மருத்துவத்துறை அமைச்சு

## பொருளடக்கம்


தொலைநோக்கு

செயற்பணி

01. அறிமுகம் 01

02. அமைச்சின் முன்னுரிமைச் செயற்பாடுகள் 03

03. சுதேச மருத்துவத்துறை அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள் 04

04. சுதேச மருத்துவத்துறை அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள நிறுவனங்களின் செலவுச் சுருக்கம – 2013 05

05. சுதேச மருத்துவத்துறை அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படும் அபிவிருத்தி கருத்திட்டங்கள் / நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றின் முன்னேற்றம் 06

06. அமைச்சுகளுக்கிடையிலான ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் 09

07. சுதேச மருத்துவத்துறை அமைச்சின் தகவல் தொழில்நுட்ப அணுகல் 12

08. சுதேச அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் கருத்திட்டங்கள் / நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் - 2013 12

8.1 ஆயுர்வேத திணைக்களம் 13

8.2 இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம் 34

8.3 ஹோமியோபதி வைத்தியசாலை / மருத்துவச் சபை 36

## தொலை நோக்கு

சுதேச மருத்துவம் மூலம் அனைவருக்கும் சுகநலம்

## செயற்பணி

சுதேச மருத்துவ முறைமைகளில் தொழில் வாண்மை சிறப்பம்சங்களை உள்வாங்கி இலங்கை மக்களின் சமூக, பொருளாதார, உள மற்றும் ஆன்மீக நல்லிருப்பில் பங்கெடுத்து மேலான வாழ்க்கைத் தரத்தை ஏற்படுத்தல்.

# 01. அறிமுகம்

**"உலகத்திற்கு பெருமையுடன் வழங்கக்கூடிய சுதேச வைத்திய முறையொன்று எம்மிடம் உள்ளது. இந்த அறிவினை பாதுகாத்து முழு உலகத்திற்கும் பகிர்ந்தளிப்பதே காலம் எனக்கிட்ட கட்டளையெனக் கருதுகின்றேன்."**

**(மகிந்த சிந்தனை 2005 – 61ஆம் பக்கம்)**

சுதேச வைத்திய முறையானது சிங்கள இனத்தின் ஆரம்பத்தினைப் போன்று பழைமை வாயந்ததாகும். அதேபோல் இது, இலங்கையில் உள்ள பாரம்பரிய அறிவின் அடிப்படையில் உருவான வைத்திய முறையாகும். இம்முறைமையானது வட இந்தியாவிலிருந்து பெற்றுக்கொண்ட ஆயுர்வேதம், தென் இந்தியாவிலிருந்து பெற்றுக்கொண்ட சித்த மருத்துவம் மற்றும் அராபியாவிலிருந்து பெற்றுக்கொண்ட யுனானி முறை ஆகியவற்றால் போசிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மேற்குலக ஆட்சிக்குட்பட்டிருந்த காலத்தில் சுதேச வைத்திய முறை அமர்ந்து போனதுடன், மேற்கத்தைய வைத்திய முறை நாடு முழுவதிலும் பரவி தேசிய சுகாதார முறையாக மாறியது.

எனினும் சுதேச வைத்திய முறையில் காணப்பட்ட குணவியல்புகளை அடையாளம் கண்டுகொண்ட அரசு, அதனை விருத்தி செய்யும் நோக்கோடு செயற்பட்டதுடன், தனியான திணைக்களமொன்றை சுகாதார அமைச்சின் கீழ் நிறுவி இதன் நிலைத்திருப்பினை உறுதி செய்தது. சுகாதர அமைச்சு சுகாதார மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சு எனப் பெயரிடப்பட்டதுடன், 1980ம் ஆண்டு சுதேச மருத்துவத்துறை அமைச்சு தனியான அமைச்சாக நிறுவப்பட்டது. தற்போது இது அமைச்சரவை அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சரின் மேற்பார்வையின் கீழ் பேணப்படல் சுதேச வைத்திய முறையின் மேன்மைக்கு தாக்கத்தை செலுத்தும் விடயமாகும். சுதேச மருத்துவத்தின் ஊடாக தேசத்தின் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்யக்கூடிய சுகாதார வளம் மற்றும் சுபீட்சமான இனத்தை உருவாக்கும் நோக்கத்துடன் சுதேச மருத்துவத்துறை பாரிய பணிகளை ஆற்றுகின்றது.

தற்போது நாடெங்கிலும் சுதேசிய மருத்துவ முறை பரவியுள்ளதுடன், அனேகமானோர் இம்முறையின் கீழ் சிகிச்சை பெறுவதற்கு விரும்புவதனைக் காணமுடிகின்றது. அத்தோடு தரமான ஔதட உற்பத்திகளின் மூலம் ஏனைய நாடுகளுக்கும் சுதேச வைத்திய முறையினை பரப்புவதற்கு முடிந்துள்ளமை நாம் பெற்றுள்ள வெற்றியாகும். சுதேசிய வைத்திய முறையினை பாதுகாத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் மூலம் மக்களின் நலத்தினை பேணுதல் அமைச்சின் பிரதான நோக்கமாகும்.

1) சுதேச வைத்தியமுறைகளை மேம்படுத்துவதற்காக கொள்கைளை உருவாக்குதல்.

2) ஆரோக்கியமான தேசமொன்றை உருவாக்குவதற்காக சுதேச வைத்திய முறைகளைப் பயன்படுத்தல்.

3) சுதேச மருத்துவ முறைமையை பாதுகாத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல்.

4) சுதேசிய மூலிகை வளர்ப்பை பரந்தளவில் செயற்படுத்துவதன் மூலம் மருந்து உற்பத்தியை அதிகரித்தல்.

5) பாதுகாப்பான ஆயுர்வேத மருத்துவ முறைமையை உருவாக்குவதன் மூலம் சுற்றுலாத்துறையினை விருத்தி செய்து அதன் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்தல்.

6) ஹோமியோபதி மருத்துவ முறைமையை மேம்படுத்தல்.

இதுவரை நாடெங்கிலும் 86 ஆயுர்வேத வைத்தியசாலைகளும், 283 மருந்துச்சாலைகளும் நிறுவப்பட்டுள்ளதோடு, இவற்றிலிருந்து வருடத்திற்கு 4 மில்லியனுக்கும் அதிகமான வெளி நோயாளர்களும், 75000ற்கு மேற்பட்ட தங்கியிருந்து சிகிட்சை பெறுவோறும் சேவையினைப் பெற்றுக்கொள்கின்றனர். தற்போது 1176 அரச ஆயுர்வேத மருத்துவர்கள் சேவையில் ஈடுபட்டுள்ளனர். மாகாண சபைகளின் கீழ் உள்ள 250 சுதந்திர ஆயுர்வேத மருந்தகங்களின் மூலம் சிகிட்சை அளிக்கப்படுவதுடன், அவற்றின் நிர்வாகம் மாகாண சபைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட போதும், அவற்றிற்கான மருந்துகள் வழங்குவதற்கான பொறுப்புகள் சுதேச மருத்துவத்துறை அமைச்சுக்கும், ஆயுர்வேத திணைக்களத்திற்கும் சாட்டப்பட்டுள்ளது. நாட்டில் உள்ள மொத்த சனத்தொகையினைக் கருத்தில் கொண்டால்,

அதில் 11 சதவீதத்தினர் இலவச அரச ஆயுர்வேத மருத்துவ சேவையினைப் பெற்றுக்கொள்வதோடு, மேலும் அதிகமானோர் தனியார் ஆயுர்வேத வைத்தியசாலைகளிலும் மற்றும் மருந்தகங்களிலும், பரம்பரை வைத்தியர்களிடமும் சேவையினைப் பெற்றுக்கொள்கின்றனர்.


எங்கள் சேவையைப் பெற்றுக்கொள்பவர்களுக்கு சிறந்த சேவையினை வழங்குவதற்காக கீழ்வரும் நிறுவனங்கள் செயற்படுத்தப்படுகின்றது.

1. ஆயுர்வேத திணைக்களம்
2. ஆயுர்வேத வைத்திய சபை
3. பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனம்
4. பாரம்பரிய வைத்திய முறைபற்றிய தேசிய நிறுவனம்
5. ஆயுர்வேத வைத்தியசாலை மற்றும் மருந்தகங்கள்
6. மூலிகைத் தோட்டங்கள்
7. இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம்
8. ஹோமியோபதி வைத்திய சபை
9. வெலிசர ஹோமயோபதி வைத்தியசாலை மற்றும் சிகிச்சை நிலையம்
10. ஆயுர்வேத சமூக சுகாதார மேம்படுத்தல் காரியாலயம் - அனுராதபுரம்

# 02. அமைச்சின் முன்னுரிமைச் செயற்பாடுகள்

| விசேட கவனத்திற்குள்ளான முன்னுரிமை வழங்கும் பிரிவுகள் | பெறுபேறு அடைவுகளின் குறிகாட்டிகள் |
|---|---|
| 1. சுதேச மருத்துவ முறைமை தொடர்பான சட்ட வரம்பை வலுவாக்குதல். | ஆயுர்வேத மருத்துவ முறைமைப் பாவனையில் உள்ள முறைகேடுகளைக் கட்டுப்படுத்தல்.<br>தொழில் ரீதியில் திருப்தியான ஆயுர்வேத மருத்துவர்களை உருவாதல்.<br>ஆயுர்வேத சிகிச்சை நிறுவனங்களை சட்ட ரீதியான அடிப்படையில் வலுவானதாக்கல். |
| 2. ஆயுர்வேத ஆராய்ச்சிகளை வலுவாக்குதல் மற்றும் விருத்தி செய்தல். | தரமுடைய புதிய ஆயுர்வேத உற்பத்திகளின் எண்ணிக்கையினை அதிகரித்தல்.<br>ஆயுர்வேத ஆராய்ச்சியாளர்களின் உரிமைகளை உறுதிப்படுத்தல்.<br>ஆயுர்வேத மருத்துவ முறையின் அங்கீகரிப்பை விரிவுபடுத்தல்.<br>ஆயுர்வேத ஆராய்ச்சிகள், ஆராய்ச்சியாளர்களுக்கு அதிக வாய்ப்பளித்தல்.<br>தொற்றா நோய்கள் சம்பந்தமாக – பாரம்பரிய வைத்திய முறைகளை முறையாக அறிமுகம் செய்தல்<br>பேணப்பட்டுவரும் பாரம்பரிய ஆயுர்வேத ஆவணங்கள் அதிகரித்தல்.<br>ஆயுர்வேதத்துடன் தொடர்புடைய புலமைச் சொத்துரிமையை பாதுகாத்தல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தப்படுதல். |
| 3.ஆயுர்வேதத்திற்கு தகவல் தொழில் நுட்பத்தை பயன்படுத்துதல். | இற்றைப்படுத்தப்பட்ட தகவல் தொகுதியை உருவாதல்.<br>ஒழுங்குமுறையிலான முறைமையொன்றினை உருவாக்கல்.<br>ஈ-ஆயுர்வேத வைத்திய முறையை நிர்மாணிக்கப்படுதல்.<br>ஆயுர்வேத வைத்திய முறை விரிவாகல். |
| 4. ஆயுர்வேத சுகாதார பாதுகாப்பை இற்றைப்படுத்தி மேம்படுத்துவதற்காக மனிதவள அபிவிருத்தியினை மேற்கொள்ளல் | தரமுடைய மனித வளமானது எண்ணிக்கையை அதிகரித்தல்.<br>தொழில் ரீதியில் திருப்தியான மனித வளத்தை அதிகரித்தல்.<br>சுதேசிய மருத்துவ முறைக்கு உலகளாவிய ரீதியில் உள்ள கேள்விகளை பூர்த்தி செய்வதற்கு இயலுமாதல்.<br>பாரம்பரிய மருத்துவர்களுக்கு உள்ள அறிவு மற்றும் திறனை சமூகத்திற்கு பயன்படும் வகையில் இற்றைப்படுத்தல்.<br>நிபுணத்துவம் மிக்க வைத்தியர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.<br>அரச மற்றும் தனியார் பிரிவுகளில் ஆயுர்வேத முறைகளைப் பயன்படுத்துபவர்களின் அறிவு, மனப்பாங்கு மற்றும் திறமையினை மேம்படுத்தல் |
| 5.ஆயுர்வேத மூலிகை உற்பத்தியை மேம்படுத்தல் மற்றும் மூலிகைச் செடி வளர்ப்பை அதிகரித்தல், மேம்படுத்தல் மற்றும் மூலிகைத் தோட்டங்களை ஆரம்பித்தல். | உயர்த்தினை உடைய சிறந்த குணமுடைய மருந்துகளின் எண்ணிக்கை அதிகரித்தல்.<br>ஆயுர்வேதம் மூலமாக வருமான உற்பத்தியை அதிகரித்தல்.<br>ஆயுர்வேத மூலிகைகளுக்கான வெளிநாட்டு சந்தை வாய்ப்பு அதிகரித்தல்.<br>பயன்பாட்டுக்கு இலகுவான மருந்துகளின் உற்பத்தி உயர்வடைதல். |
| 06. ஆயுர்வேத செயற்பாடுகளை விரிவாக்குதல் | பாரம்பரிய மருத்துவம், ஆயுர்வேதம், சித்த மற்றும் யுனானி மருத்துவ முறைகள் சர்வதேச அளவில் பிரசித்தம் அடைந்திருத்தல்.<br>விசேடமான ஆயுர்வேத சிகிச்சை முறைகளை வழங்கக் கூடிய புதிய வசதிகளை உடைய வைத்தியசாலைகள் உருவாதல்.<br>இருக்கும் மூலிகை தோட்டங்கள் மற்றும் புதிய மூலிகைத் தோட்டங்கள் சிறந்த முறையில் காணப்படல். |
| 07. ஹோமியோபதி மருத்துவ முறைமையின் பயன்பாட்டை அதிகரித்தல். | ஹோமியோபதி மருத்துவ முறைகளைப் பயன்படுத்தும் நிறுவனங்களை ஒழுங்குமுறையில் நிறுவுதல்.<br>தொழில் ரீதியாக திருப்திகரமான ஹோமியோபதி மனித வளம் உருவாதல். |

## 03. சுதேச மருத்துவத்துறை அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள்



## 04. சுதேச மருத்துவத்துறை அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள நிறுவனங்களின் செலவுச் சுருக்கம் -2013

| | 2013ம் ஆண்டுக்கான ஒதுக்கீடு (ரூ.000') | 2013ம் ஆண்டுக்கான செலவு (ரூ.000') | செலவு செய்யப்பட்ட வீதம் |
|---|---|---|---|
| சுதேச மருத்துவத்துறை அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள நிறுவனங்கள் | | | |
| மீள்கட்டுமானம் | 227,665.00 | 159,921.04 | 70.2 |
| சாதாரண நிர்வாகமும் வேறு நிகழ்ச்சிகளும் | **130,165.00** | **100,047.25** | **76.8** |
| நிறுவனங்களின் சேவைகள் | | | |
| ➢ ஹோமியோபதி வைத்தியசாலை / மருத்துவச் சபை | **27,500.00** | **15,929.68** | **57.9** |
| விசேட நிகழ்ச்சித்திட்டம் | | | |
| ➢ ஆயுர்வேத மருந்துகள் | **65,000.00** | **42,623.14** | **65.5** |
| ➢ போஷணை நிகழ்ச்சித்திட்டம் | **5,000.00** | **1,320.97** | **26.4** |
| கட்டுமானம் | **246,265.00** | **147,601.20** | 59.9 |
| பொது நிர்வாகம் | 67,265.00 | 30,352.06 | 45.1 |
| விசேட நிகழ்ச்சித்திட்டம் | | | |
| ➢ மக்கள் அபிவிருத்தி வேலைத்திட்டம் | 105,000.00 | 87,443.68 | 83.3 |
| ➢ மருந்துக்கூட்டுத்தாபன கட்டுமானம் | 25,000.00 | 3,000.00 | 12.0 |
| ➢ பாதுகாப்புச்சபை | 7,000.00 | 1,991.89 | 28.5 |
| ➢ இளம் மருந்துச்செய்கையாளர் கிராமம் - நிகழ்ச்சித்திட்டம் | 1,000.00 | 301.64 | 30.2 |
| ➢ ஹோமியோபதி வைத்தியசபை / துறை அபிவிருத்தி | 38,000.00 | 22,092.78 | 58.1 |
| ➢ போஷணமந்திர் | 3,000.00 | 2,419.15 | 80.6 |
| மொத்தம் | 473,930.00 | 307,522.24 | 64.89 |

ஆயுர்வேத திணைக்களத்தின் பிரதான காரியாலயத்தின் செலவுச்சுருக்கம் - 2013

| | 2013ம் ஆண்டுக்கான ஒதுக்கீடு (ரூ.000') | 2013ம் ஆண்டுக்கான செலவு (ரூ.000') | செலவு செய்யப்பட்ட வீதம் |
|---|---|---|---|
| மீள்கட்டுமானம் | **721,250.00** | **636,568.74** | **88.23** |
| 1. பொது நிர்வாகம் | 89,863.00 | 75,550.29 | 84.1 |
| 2. நோய் நிவாரணி | 423,620.00 | 385,871.18 | 91.1 |
| 3. ஆய்வு | 120,697.00 | 102,015.67 | 84.5 |
| 4. கல்வியும் நிர்வாகமும் | 38,390.00 | 29,630.48 | 77.2 |
| 5. மூலிகை வளர்ப்பு காதுகாப்பு | 48,680.00 | 43,501.13 | 89.4 |
| கட்டுமானம் | **575,720.00** | **124,753.30** | **21.67** |
| 1. பொது நிர்வாகம் | 11,220.00 | 7,743.30 | 69.0 |
| 2. நோய் நிவாரணி | 158,500.00 | 37,189.01 | 23.5 |
| 3. ஆய்வு | 362,200.00 | 52,095.20 | 14.4 |
| 4. கல்வியும் நிர்வாகமும் | 11,300.00 | 3,430.79 | 30.4 |
| 5. மூலிகை வளர்ப்பு காதுகாப்பு | 35,500.00 | 24,295.08 | 74.8 |
| மொத்தம் | **1,296,970.00** | **761,322.14** | 58.7 |

| | | | |
|---|---|---|---|
| மொத்தச் செலவு | **1,770,900.00** | **1,068,844.38** | **60.36** |

# 05. சுதேச மருத்துவத்துறை அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படும் அபிவிருத்தி கருத்திட்டங்கள் / நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றின் முன்னேற்றம்

## 5.1 அனுராதபுர சமூக சுகாதார மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்.

அனுராதபுர மாவட்டத்தில் இருபத்தி இரண்டு பிரதேச செயலகப் பிரிவுகளில் செயற்படுத்தும் கருத்திட்டமாக, 2001ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கருத்திட்டம் சுதேச மருத்துவத்துறை அமைச்சின் கீழ் தற்போது வரை செயற்படுத்தப்படும் நோய் நிவாரணக் கருத்திட்டமாகும்.

இதன் பிரதான நோக்கம், மக்களை அறிவூட்டுவதன் மூலம் அவர்களின் உடல்நலத்தை மேம்படுத்துதல் மற்றும் அதனூடாக அவர்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்தலாகும். ஆயுர்வேத சமூக சுகாதார மேம்பாட்டுச் சேவை, ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்துடன் ஆராய்ச்சி அவதானிப்பினை மேற்கொள்வதற்காக 03 வருடத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அதனூடாக 2013ம் ஆண்டு பல்வேறுபட்ட விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, பல்கலைக்கழக பாடநெறிகளில் பங்குபற்றுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கப்பெற்ற சமூக சுகாதார மருத்துவர்கள் மற்றும் சமூக சுகாதார உதவியாளர்களுக்கு, இந்தப் பயிற்சிநெறியின் ஊடாக ஒழுங்குமுறையான பயிற்சியை வழங்கி சுகாதார நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கான வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.



**அனுராதபுர ஆயுர்வேத சமூக சுகாதார மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் பயிற்சி கற்கையை நடாத்துதல்**

**அனுராதபுர ஆயுர்வேத சமூக சுகாதார மேம்படுத்தல் சேவை முன்னேற்றத்தின் சுருக்கம் - 2013**

| | நிகழ்ச்சித்திட்டம் | நிகழ்ச்சித்திட்டத்தின் விபரம் | நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் | பயன்பெறுநர்கள் |
|---|---|---|---|---|
| 1 | பாதுகாப்பான நீரைப் பயன்படுத்துவோம் | நீர்ப் போசணைகளைப் பாதுகாக்கும் நிகழ்ச்சித்திட்டம். பகுப்பாய்வு செய்யப்பட்ட நீர் மாதிரிகளின் எண்ணிக்கை | 36 | 953 |
| 2 | சுதேச உணவு வகைகளை பிரபல்யப்படுத்தல். உள்நாட்டு முறைகளினால் உணவில் சுவையைப் பாதுகாப்போம் | பிரயோக ரீதியான/ அறிவூட்டல் நிகழ்ச்சதிட்டங்கள் | 2150 | 15985 |
| 3 | சிறுவர் சுகாதாரப் பாதுகாப்பு | சிறுவர்களின் நலத்தை மேம்படுத்தல் /சிகிச்சைகள் | 1635 | 9764 |
| 4 | பரவாத நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டம் | ➢ நடமாடும் வைத்திய சிகிச்சைகள்<br>➢ சிறுநீரகத்தை பாதுகாப்போம் நீரிழிவைத் தவிர்ப்போம்<br>➢ ஆயுள்வேதத்தினூடாக தொழில் அபிவிருத்தி<br>➢ சேதன வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கை நிகழ்ச்சித்திட்டம்<br>➢ பாரம்பரிய நெற் பயிற்செய்கைக்கு விவசாயிகளை ஊக்குவித்தல்<br>➢ வீட்டுக்குவீடு அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டம் | 1211<br>617<br>143<br>374 | 38578<br>12850<br>3462<br>3969<br>807<br>38463 |
| 5 | பரவும் நோய்களைக் கட்டுப்படுத்தல். | அறிவூட்டல் /கருத்தரங்குகளின் எண்ணிக்கை | 1292 | 9741 |
| 6 | தாய்மாரைப் பாதுகாத்தல். கர்ப்பிணித் தாய் நாட்டின் வளம் | தாய்மாருக்கான சிகிச்சை | 73 | 711 |
| 7 | பாடசாலை நிகழ்ச்சித்திட்டங்கள் | ➢ சரோதினி நிகழ்ச்சித்திட்டம்<br>➢ ஒரு வருட புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டம்<br>➢ ஆயுர்வேதத்தை சார்ந்த சுகாதார நிகழ்ச்சித்திட்டம்<br>➢ யோகா நிகழ்ச்சித்திட்டம் | 25<br>113<br>479<br>6 | 851<br>5402<br>3245<br>191 |
| 8 | முதியோர் சிகிச்சை சேவைகள் | வீட்டு மூலிகைகள் நிகழ்ச்சித்திட்டம்<br>சிகிச்சை எண்ணிக்கை | 255<br>50 | 697<br>1821 |
| 9 | சமூக சிகிச்சை சேவை | ➢ பொலிஸ் / முப்படை சிகிச்சை சேவை<br>➢ அபிமங்சல அங்கவீனமான முப்படையினருக்கான சிகிச்சை சேவை<br>➢ பிரதேச நடமாடும் சேவை<br>➢ ஆவசரகால இடர் முகாமைத்தவ நிகழ்ச்சித்திட்டம்<br>➢ ஏனைய நிகழ்ச்சித்திட்டம் | 9<br>1<br>76<br>24<br>841 | 752<br>193<br>2998<br>303<br>6394 |
| 10 | மூலிகைப் பயிர்களை பாதுகாத்தல் மற்றும் நிரந்தரமான பாவனையை நிரந்தரமாக்கல் | ➢ மூலிகைத் தோட்ட நிகழ்ச்சித்திட்டம் - அரச நிறுவனங்கள் /பாடசாலைகள்<br>➢ பயிரிடப்பட்ட/ விநியோகிக்கப்பட்ட மூலிகைப் பயிர்களின் எண்ணிக்கை<br>➢ மாதிரி நாற்று மேடை | 185<br>82 | 2937<br>82 |
| 11 | இரஜரட்ட மருத்துவ பீட ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டம் | முதியோர் சிகிச்சை சேவை நிகழ்ச்சித்திட்டம் | 227 | 500 |

### 5.2 போசணை இல்ல நிகழ்ச்சித்திட்டம்

சுதேச மருத்துவமுறையினை உபயோகித்து, மக்களின் போசணை நிலையை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டு பிரதேச செயலக மட்டத்தில் போசணை இல்லங்களை நிர்மாணித்தல் மற்றும் இலைக் கஞ்சியினை விநியோகித்தல் என்பன மேற்கொள்ளப்படுகின்றது. இதுவரை பன்வில், பல்லேகல, மதவாச்சி, கங்க ஒகல கோரளை மற்றும் கொலொன்னா ஆகிய பிரதேசங்களில் போசணை இல்லங்கள் 05 நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன், பொரளை ஆயுர்வேத வைத்தியசாலை கட்டடத்தொகுதியில் போசணை இல்லத்தினை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. சுதேச மருத்துவத்துறையை மேம்படுத்தும் நோக்குடன், உள்ளூர் உணவுகள், மூலிகைப் பானங்கள் மற்றும் கீரைக் கஞ்சியினை மக்களுக்கிடையில் பிரபல்யப்படுத்துவதுடன், ஆயுர்வேதம்சார் பழக்கவழக்கங்களுக்கு மக்களை பழக்குவதன் ஊடாக நோயற்ற மக்களை உருவாக்கும் நோக்குடன், யாழ் நயினாதீவு போசனை மந்திர் திறந்து வைக்கப்பட்டது.நயினாதீவு புராதன ரஜமகா விகாரையின் தலைமையதிபதியும்,

வடக்கு மாகாணத்தின் பிரதான சங்கநாயக்கருமாகிய பூஜ்ய நவதகல பதுமகித்திதிஸ்ஸ நாயக்க தேரரின் தலைமையின் கீழ், கடற்படையினரின் ஒத்துழைப்போடு, நயினாதீவில் போசணை இல்லத்தை அமைப்பதற்கு ரூபா 2.5 மில்லியன் ஒதுக்கப்பட்டது. 11.06.2013ம் திகதி இந்த போசணை இல்லம் வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது.



**யாழ்பாணம், நயினாதீவில் போசணை இல்லத்தினை திறந்து வைத்தல்.**



**அம்பாறை தேசத்துக்கு மகுடம் கண்காட்சியில் இலைக்கஞ்சி விநியோகம்**

**5.3 உள்ளூர் உணவுப் பழக்கவழக்கங்கள் பற்றிய அறிவூட்டல் கருத்தரங்கு.**

நாடுமுழுவதிலுமுள்ள அரச மற்றும் தனியார்துறை ஊழியர்களுக்காக உள்நாட்டு உணவுகளைப் பிரபல்யப்படுத்தல் மற்றும் வாழ்க்கை முறையை அறிமுகப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. இதன்படி 25.06.2013 இல் பதுளை மாவட்ட செயலாளர் காரியாலய கேட்போர் கூடத்தில் கௌரவ சுதேச மருத்துவத்துறை அமைச்சரின் தலைமையில் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் இன்னுமோர் நிகழ்ச்சி நடாத்தப்பட்டது. இதில் 200ம் மேற்பட்ட அரச ஊழியர்கள் பங்குபற்றியதுடன், 2013 ஜுன் மாதம் போசணை மாதம் எனப் பெயரிடப்பட்டு, மேலும் போசணை நிகழ்ச்சிகள் பல நாடு முழுவதிலும் நடாத்தப்பட்டது. கொழும்பு மாவட்ட பயிற்சிப்பட்டறை 29.10.2013இல் நாவின்ன பண்டாரநாயக்க ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவன கேட்போர்கூடத்தில் நடாத்தப்பட்டதுடன், இதில் அரச மற்றும் தனியார்துறை ஊழியர்கள் மற்றும் ஊடக அலுவலர்கள் என 200ம் மேற்பட்டவர்கள் பங்குபற்றினர்.

**5.4 சிரசில் எண்ணெய் தேய்க்கும் அரச வைபவம்**

சிங்கள மற்றும் தமிழ் புதுவருட வைபவத்திற்கு சமாந்தரமாக நடைபெறும் சிரசில் எண்ணெய் தேய்க்கும் அரச வைபவம், ஒவ்வொரு வருடமும் சுதேச மருத்துவத்துறை அமைச்சின் கீழ் அமைந்துள்ள ஆயுர்வேதத் திணைக்களத்தினால் ஒழுங்குசெய்யப்படும். இம்முறை இந்த வைபவம் 2013 சித்திரை மாதம் 15ம் திகதி முற்பகல் 6.41 மணிக்கு இருந்த சுபவேளையில், அதிமேன்மைதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் கதிர்காமம் கிரி விகாரை ரஜமகா விகாராதிபதி ருகுணு மாகம் பத்துவே பிரதான சங்கநாயக்கர், ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் பீடாதிபதி, உபண்யாய, கலாநிதி அலுத்வவ சோரத ஹிமிபானன் தேரரின் அனுசாசனத்திலும், மகா சங்காரரின் ஆசிர்வாதத்தின் கீழ் கதிர்காமம் ரஜமகா விகாரை பூமியில் கிரிவிகாரை சைத்தியத்தின் மதிப்பிக்குரிய மகாசென் தேவமந்திரிக்கு அருகில் நடைபெற்றது. சுபவேளையில் ஆரம்பமாகிய இந்த தேசிய நிகழ்வு முழுவதும் அனைத்து தொலைக்காட்சியினூடாகவும் ஒளிபரப்பப்பட்டது. இந்த அரச நிகழ்வுக்கு சமாந்தரமாக சுதேச மருத்துவத்துறை அமைச்சரின் வழிகாட்டுதலின் கீழ் ஆயுர்வேத திணைக்களித்தினால் சஞ்சிகையொன்று வெளியிடப்பட்டு, 2013 -2014ம் ஆண்டுக்கான ஆயுர்வேத பஞ்சாங்கம் மற்றும் ஆயுர்வேத கைநூல் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.





**கதிர்காமம் கிரி விகாரையில் நடைபெற்ற சிரசில் எண்ணெய் தேய்க்கும் அரச வைபவம்**

### 5.5 ஆயுள்வேத பாதுகாப்புச்சபை

பாரம்பரிய வைத்தியர்களின் முன்னேற்றம் கருதி அவர்களின் வாழ்கைத்தரத்தை அபிவிருத்தி செய்வதற்காக சகல பிரதேசசெயலர் பிரிவுகளிலும் ஆயுள்வேத பாதுகாப்பு சபைகள் உருவாக்கப்பட்டுள்ளது. 2013 ம் ஆண்டில் குருநாகல் மாவட்டத்தில் பாதுகாப்புச்சபை 14 இற்கு மருந்தரைக்கும் இயந்திரம், எண்ணெய் காய்ச்சும் இயந்திரம் 07 உம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

## 06. அமைச்சுகளுக்கிடையிலான ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்

சுதேச மருத்துவத்துறை அமைச்சு ஏனைய அமைச்சுகளுடன் இணைந்து பல நிகழச்சித்திட்டங்களை 2013ம் ஆண்டு செயற்படுத்தியது.

- ஜனாதிபதி செயலகம் - *பன்செலன் கமட*
- புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு - மூலிகை வளர்ப்பு
- கல்வி அமைச்சு – பாடசாலை மூலிகைத் தோட்டங்கள்
- கலாச்சார மற்றும் கலை நடவடிக்கைகள் அமைச்சு – ஆதிவாசிகளின் வைத்தியம், பாதுகாப்பு மற்றும் மூலிகை வளர்ப்பு
- பொருளாதார அபிவிருத்தி அமைச்சு – *திவிநெகும*
- அரச பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு – மாதின்னாகொட சேதன நெல் பயிர்ச்செய்கை
- தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்திக் கண்காட்சிக்கான பங்களிப்பு
- எஸ்போ 2013 ஆயுர்வேத சர்வதேச கண்காட்சிக்கான பங்களிப்பு

### 6.1 புனிதப் பிரதேசங்களில் மூலிகைத் தோட்டங்களை ஆரம்பித்தல் (கோவிலிலிருந்து கிராமத்திற்கு)

ஜனாதிபதி செயலகத்தின் வழிகாட்டலின் கீழ், சுதேச மருத்துவத்துறை அமைச்சின் பூரண பங்களிப்புடன், மேலும் பல அமைச்சுக்களின் வளப்பங்களிப்புடன், திவிநெகும் தேசிய கருத்திட்டத்திற்கு சமாந்தரமாக, பூஜைக்குரிய பிரதேசங்களில் மூலிகைத் தோட்டங்களை ஆரம்பித்தல் இதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. இந்தக் கருத்திட்டம் ஜனாதிபதி செயலகத்தின் ஆலோசனையாளர், பெங்கமுவே நாலக தேரரினாலும், அதற்கான ஒருங்கிணைப்பு ஜனாதிபதி செயலகத்தின் பூஜைக்குரிய கொட்டுபொல மங்கள தேரரினாலும் மேற்கொள்ளப்படுகின்றது. பூஜைக்குரிய பிரதேசங்களில் காணப்படும் நிலப்பிரதேசத்தினை பயன்படுத்துவதன் மூலம் தேசிய மூலிகைகளைப் பயிரிட்டு முன்னேற்றுவதன் மூலம் வெளிநாட்டு அந்நியச் செலவாணியை மீதப்படுத்த முடியும் என நம்பப்படுகின்றது. அத்தோடு, பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, அதனோடு இணைந்த தேசிய நிகழ்ச்சித்திட்டமாக அமுல்படுத்தும் நோக்கத்துடன், கிராம மட்டத்தில் கிராம மக்களின் பொருளாதாரத்தினை உயர்த்தவதற்கு வாய்ப்பளிப்பதற்காக, விகாரைகளை கேந்திரமாகக் கொண்டு இந்த நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், சிறந்த எதிர்காலத்தைக் கொண்ட வெற்றிகரமான விவசாயிகளை உருவாக்க முடிந்துள்ளது. தற்போது இந்த நிகழ்ச்சித்திட்டம் மாத்தறை மாவட்டத்தின் 55 விகாரைகளில் செயற்படுத்தப்படுவதுடன், இன்னொரு விசேட நிகழ்ச்சித்திட்டமாக கானங்கே பிரதேசத்தில் மூடப்பட்டிருந்த பாடசாலையான ஹிங்குருபன்னல கனிஷ்ட பாடசாலை வளாகத்தில் மூலிகைத் தோட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

### 6.2 புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சுடன் இணைந்து மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சித்திட்டம்

சிறைச்சாலையில் உள்ளவர்களினதும், புனர்வாழ்வு பெறுவர்களினதும் சிறந்த உடல்நலத்தைப் பேணுவதற்காகவும் அவர்களுக்கு வருமானத்தைப் பெற்றுக்கொடுப்பதற்காகவும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சுடன் இணைந்து மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சித்திட்டமாகும். இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக சுகாதார அமைச்சு, பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, தேசிய மரபுரிமை அமைச்சு உட்பட பல அமைசச்சுகளின் பங்களிப்பு வழங்கப்படுவதோடு, இதற்காக இம்முறை தேர்ந்தெடுக்கப்பட்டது, வட மத்திய மாகாணத்தில் உள்ள பொலொன்னறுவை மாவட்டத்தின் கந்தக்காடு பிரதேசமாகும்.

இங்கு கண்டங்கத்தரி பயிர்ச்செய்கை மீள ஆரம்பிக்கப்படுவதற்கு அவசியமான ஆலோசனை சேவைகள் மற்றும் விளைச்சலை விற்பனை செய்வதற்குரிய சேவைகளுக்கு அவசியமான தொழில்நுட்பம் மற்றும் விதைகள் வழங்கப்படுவதுடன், அதற்கு அவசியமான ஒதுக்கீட்டினை மேற்கொள்வதற்கு சுதேச மருத்துவத்துறை அமைச்சும், ஆயுர்வேதத் திணைக்களமும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றன.

அதேபோல் பல்லேகலை திறந்த சிறைச்சாலையினுள் உள்ள 05 ஏக்கர் நிலப்பரப்பில் 31 மூலிகைப் பயிர்களும், அனுராதபுரம் சிறைச்சாலையினுள் 12 மூலிகைப் பயிர்களும், வாரியபொல சிறைச்சாலையினுள் 40 பேர்ச்சஸ் நிலப்பரப்பில் 24 வகை மூலிகைப் பயிர்களும், வீரவில திறந்த சிறைச்சலையினுள் 0.25 ஏக்கர் நிலப்பரப்பில் 40 வகை மூலிகைப் பயிர்களும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பயிரிடப்பட்டது.
அத்தோடு நாட்டில் பயிர்செய்கை மேற்கொள்ளப்பட வேண்டிய பல்வேறுபட்ட காலநிலை வலயங்கள் தொடர்பாகவும், அவ்வலயங்களில் வளரும் மூலிகைப் பயிர்கள் தொடர்பாகவும் அனைத்து விடயங்களும் மற்றும் சிறைச்சாலையில் பயிரிடக்கூடிய நில அளவுகளும், 2015ம் ஆண்டுக்காக சேகரிக்கப்பட்டு, ஒன்றுதிரட்டிய திட்டமொன்றினை தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

**6. 3 கல்வி அமைச்சுடன் இணைந்து மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சித்திட்டம் (பாடசாலை மூலிகைத் தோட்டம்)**

மகிந்தோதய பாடசாலை நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக நாடு முழுவதிலும் உள்ள பாடசாலைகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 1000 பாடசாலைகளில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு சமாந்தரமாக செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. சுதேச மருத்துவத்துறை அமைச்சு மற்றும் கல்வி அமைச்சு என்பன இணைந்து இந்த நிகழ்ச்சித்திட்டத்தினை செயற்படுத்துகின்றன. அத்தோடு, மகிந்த சிந்தனை எதிர்கால நோக்குக்கு அமைவாக அதன் முக்கிய குறிக்கோளிளை அடைவதற்காக, 5000 ஆரம்பப் பாடசாலைகள் மற்றும் 1000 இரண்டாம் நிலைப் பாடசாலைகளை மறுசீரமைக்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு சுதேச மருத்துவத்துறை அமைச்சு பங்களிப்பினை வழங்கியுள்ளது. அதற்காக சமூக சுகாதார வைத்திய அலுவலர்கள் மற்றம் சமூக சுகாதார வைத்திய உதவி அலுவலர்களை தொடர்புபடுத்தி, அதனூடாக ஆலோசனைச் சேவைகளை வழங்குவதன் மூலம் அந்த நிகழ்ச்சித்திட்டம் வெற்றிகரமாக செயற்பட்டுவருகின்றது

**6.4 பொருளாதார அபிவிருத்தி அமைச்சுடன் திவிநெகும**

பொருளாதார அபிவிருத்தி அமைச்சுடன் இணைந்து இவ்வருடம் செயற்படுத்தப்பட்டது திவி நெகுமவின் 5வது கட்டமாகும். இதன் கீழ் நிரந்தரமான ஒரு இலட்சம் (100,000) வீட்டுத்தோட்டங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் விதை மற்றும் பயிர்கள் வழங்குதல் மேற்கொள்ளப்படுகின்றது. இந்தக் கருத்திட்டத்தின் மூலம் ஆயுர்வேத திணைக்களம்தின் கீழ் பராமரிக்கப்படும் 06 மூலிகைத் தோட்டங்களில் உற்பத்தி செய்யப்படும் பயிர்கள் மற்றும் விதைகள் சுதேச வைத்தியத்துறை அமைச்சினூடாக விநியோகிக்கப்பட்டது.

இதன் இன்னுமோர் கட்டமாக விதை மற்றும் நாற்றுப்பயிர்களை நடும் ஆரம்ப வைபவம் அதிமேன்மைதகு ஜனாதிபதியின் தலைமையில் நடாத்தப்பட்டதுடன், இந்த நிகழ்வுக்கு சமாந்தரமாக நாடுமுழுவதிலுமுள்ள மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள் மற்றும் கிராம சேவகர் பிரிவு மட்டத்தில் விதைகள் மற்றும் பயிர்செய் நாற்றுக்களை நடுவதற்கான ஒழுங்குகள் ஒழுங்கமைப்பட்டிருந்தது.

**6.5 அரச பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சோடு மேற்கொள்ளப்படும் மாதின்னாகொட சேதன நெற்பயிர்ச்செய்கை**

அரச பாதுகாப்பு மற்றும் நகர அபிவருத்தி அமைச்சுடன் இணைந்து மாதின்னாகொட சேதன மாதிரி தோட்டமொன்றை ஆரம்பித்து, மூலினை குணங்கள் நிறைந்த நெல் வகைகளை பயிரிட்டு, விஷத்தன்மையற்ற உணவுகளை தயாரித்தல் மேற்கொள்ளப்படுகின்றது. இந்தப் பயிர்செய்கை 2012ஆம் ஆண்டு மே மாதம் ஆரம்பிக்கப்பட்டதுடன், அதன் முதலாவது விளைச்சல் அறுவடை அவ்வருடத்தின் ஒகஸ்ட் மாதத்தில் மேற்கொள்ளப்பட்டது. இங்கு சராசரி அறுவடை ஏக்கருக்கு 80 புசல்களாகும். அதன் இரண்டாம் கட்டத்தின் கீழ் பயிரிடுதல் சபாநாயகர் சாமல் ராஜபக்ஷ அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

**6.6 தயட கிருள தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கான பங்களிப்பு**

2013ஆம் ஆண்டு தயட கிருள தேசிய அபிவிருத்தி நிகழ்சித்திட்டம் அம்பாறை மாவட்டத்தினை பிரதானப்படுத்தி அம்பாறை ஹாடி பாடசாலை பூமியில் நடைபெற்றது. இதற்கு அமைச்சினால் நிர்மானிக்கப்பட்ட கண்காட்சிக்கூடமும், மூலிகைத்தோட்டமும் சகலரின் அவதானத்துக்கும் உள்ளாக்ப்பட்டது.

2013ஆம் ஆண்டு தயட கிருளவிற்கு சமாந்தரமாக சுதேச மருத்துவத்துறை அமைச்சு அம்பாறை ஆயுர்வேத வைத்தியசாலையை பிரதானப்படுத்தி நிகழ்சித்திட்டங்கள் பலவற்றை நடாத்தியதுடன், வருடம் முழுவதிலும் பிரதேச செயலக மட்டத்தில் நடாத்தப்பட்ட நடமாடும் சிகிச்சை நிலையங்கள் மூலம் சிற்சில நோய்களால் துன்பபடும் நபர்களைக் கண்டறிந்து, நிரந்தரமான சிகிச்சைக்காக மாகாண ஆயுர்வேத மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைக்கு

அனுப்பி வைக்கப்பட்டனர். அதேபோல், அம்பாறை மாவட்டத்தின் சிரேஸ்ட பிரஜைகளுக்கு தங்கியிருந்து சிகிச்சை பெறும் வசதிகளி விரிவாக்கப்பட்டு, அம்பறை ஆயுர்வேத வைத்தியசாலையில் புதிய பெண்கள் மற்றும் ஆண்கள் வாட்டுக்கள் இரண்டு சகல வசதிகளுடனும் நிர்மாணிக்கப்பட்டது. கௌரவ சுதேச மருத்துவத்துறை அமைச்சர் சாலிந்த திசாநாயக்க அவர்களின் கரங்களினால் அடிக்கல் நாட்டப்பட்டு 2013ஆம் ஆண்டு தயட கிருளவிற்காக திறந்து வைக்கப்பட்டது.

'அரச அலுவலர்களின் தொழில் சுகாதாரத்தை பேணும் நிகழ்ச்சித்திட்டம்' , 'கர்ப்பிணிப் தாய் நாட்டின் செல்வம்'., 'முதியோர் சிகிச்சை நிகழ்ச்சித்திட்டம்' மற்றும் ' குழந்தைகள் மற்றும் தாய் போசணை நிகழ்ச்சித்திட்டம்' உட்பட பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களி பிரதேசத்தவர்களின் நன்மைகளுக்காக ஆரம்பித்துவைக்கப்பட்டது. ரூபா 11 மில்லியன் ஒதுக்கீட்டின் கீழ் திருகோணமலை சித்த ஆயுர்வேத வைத்தியசாலை நிர்மாணிப்பினை ஆயுர்வேத திணைக்களம் மேற்கொண்டதுடன், ரூபா 24 மில்லியன் ஒதுக்கீட்டின் கீழ் திருகோணமலை – கந்தளாய், பொலொன்னறுவை – திமுலாகல சிங்கள மருத்துவ இல்லங்கள் நிறுவப்பட்டது. இந்த தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு சமாந்தரமாக மேலும் ஒரு சமூக சேவையாக மிகிந்தலை பாரம்பரிய வைத்திய ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் ஆயுர்வேத திணைக்களம் என்பவற்றின் ஊடாக வைத்தியசாலையொன்று நிர்மாணிக்கப்பட்டதுடன், ஹொரவபொத்தான மற்றும் பதவிய பிரதேசங்களில் சமூக சுகாதர காரியாலயங்கள் 02 திறந்து வைக்கப்பட்டது.

2014ம் ஆண்டு தேசத்திற்கு மகுடம் தேசிய நிகழ்ச்சித்திட்டம் வடமேல் மாகாணமான குருநாகல், கேகாலை மற்றும் புத்தளம் மாவட்டங்களைக் கேந்திரமாகக் கொண்டு நடத்தப்படவுள்ளதால், அதற்கு சமாந்தரமாக பல்வேறுபட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்படுவதுடன், கிராம மட்டத்தில் மற்றும் தேர்தல் பிரிவு மட்டத்தில் நடமாடும் சேவைகள் நடாத்தப்படுகின்றது. அத்தோடு, ஆயுர்வேத வாழ்க்கைக் சுட்டிகள் பற்றி சமூகத்தினை அறிவூட்டுவதற்காகவும் மூலிகை வளர்ப்பினை பிரபல்யப்படுத்துவதற்காகவும் அது தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்கள் அப்பிரதேச மக்களை எண்ணி செயற்படுத்தப்பட்டது.



ம்பாறை வைத்தியசாலையில் திறந்து வைக்கப்பட்ட முதியோர் சிகிச்சை வாட்டு



தயட கிருள தேசிய கண்காட்சியில் சுதேச மருத்துவத்துறை சிரேஸ்ர அமைச்சின் காட்சிக்கூடம்.

**6.7 எஸ்போ 2013 ஆயுர்வேத சர்வதேச கண்காட்சிக்கான பங்களிப்பு**

இலங்கை தேசிய வணிக சபையுடன் இணைந்து சுதேச மருத்துவத்துறை அமைச்சின் பூரண ஒத்துழைப்பு மற்றும் அனுசரணையின் கீழ் 2013 ஜுலை மாதம் 12 – 14 வரையான காலப்பகுதியில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இலங்கையின் சுதேச வைத்திய முறை மற்றும் உற்பத்திகள் தொடர்பாக உரிய பிரச்சாரத்தினை வழங்கி உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் நோய் தீர்ப்பதற்கு இந்த வைத்திய முறையில் உள்ள சிறப்புகள் தொடர்பான மக்களை அறிவூட்டுவதே இந்தக் கண்காட்சியின் நோக்கமாக அமைந்ததுடன், இக்கண்காட்சியில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டைச் சேர்ந்த ஆயுர்வேத துறையினைச் சேர்ந்த பல்வேறுபட்ட பொருள் மற்றும் சேவைகளை வழங்குனர்கள் பலர் பங்குபற்றினர். 2013 ஆயுர்வேத எஸ்போ சர்வதேச கண்காட்சியில் சிறந்த கண்காட்சிக்கூடமாக சுதேச மருத்துவத்துறை அமைச்சின் கூடம் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது சிறப்பான விடயமாகும்.

இம்முறை நடைபெற்ற எஸ்போ சர்வதேச கண்காட்சிக்கு சுதேச மருத்துவத்துறை அமைச்சினை பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக கீழ்வரும் வியாபாரக்கூடங்கள் அமைக்கப்பட்டிருந்தது.

- மூலிகைப் பயிர்கள் மற்றும் பரவல் பற்றிய கண்காட்சிக்கூடம்
- ஆயுர்வேதம் மற்றும் யோக கண்காட்சிக்கூடம்
- மருத்துவ இல்லக் கண்காட்சிக்கூடம் மற்றும் வியாபாரக்கூடம்
- தேசிய உணவு மற்றும் போசணை பற்றிய கூடம்
- நூல் விற்பனை மற்றும் கண்காட்சி






**பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற ஆயுர்வேத எக்ஸ்போ சர்வதேச கண்காட்சி**

## 07. சுதேச மருத்துவத்துறை அமைச்சின் தகவல் தொழில்நுட்ப அணுகல்

இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் வழங்கிய கொள்கை இலக்கம் 10101 மற்றும் 10102 இன் கீழ் நிறுவப்பட்ட சுதேச மருத்துவத்துறை அமைச்சின் தகவல் தொழில்நுட்ப பிரிவு செயற்படுகின்றது.

ஆயுர்வேதம் பற்றிய அறிவு, விளக்கம் மற்றும் ஆயுர்வேத வாழ்க்கை முறை தொடாபாக சிறந்த பழக்கவழக்கங்களை கட்டியெழுப்பும் நோக்கத்துடன், மூலிகைப் பயிர்கள், ஆயுர்வேத உணவுப் பழக்கங்கள், அன்றாட பாவனைக்கு பயன்படுத்தப்படும் கைமருந்துகள் பற்றிய தகவல்கள் உள்ளடங்களி மின் அஞ்சல் சேவையொன்று கவர்ந்திழுக்கும் வகையில் செயற்படுத்தப்படுவது அமைச்சின் தொழில்நுட்ப தொடர்பாடல் பிரிவின் சிறப்பான பணியாகும். இதனுாடாக மின்னஞ்சல் மூலம் 6000ற்கும் மேற்பட்ட அரச ஊழியர்கள் தொடர்பாடலுக்காக இணைகப்படுவர். அத்தோடு, இதன்கீழ் கீழ்வரும் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றது.

- அமைச்சின் வெப்தளத்தினை பேணுதல் மற்றும் மேம்படுத்துதல்
- அமைச்சின் கணணி வலையமைப்பை பேணுதல் மற்றும் புதுப்பித்தலுக்கு உதவுதல்
- கணணிகளை பேணுதல் மற்றும் புதுப்பித்தல் மற்றும் சேவைகளுக்கு உதவுதல்
- அமைச்சின் கிரபிக் நிர்மாண நடவடிக்கைகள் (புத்தகங்கள், அறிக்கைகள், பாதகைகள், இறுவட்டு)




## 08. சுதேச மருத்துவத்துறை அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களும் அவற்றின் கருத்திட்டங்கள் , நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றின் முன்னேற்றங்கள் - 2013

8.1 ஆயுர்வேதத் திணைக்களம்

8.2 இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம்

8.3 ஹோமியோபதி வைத்தியசாலை / மருத்துவச் சபை

## 8.1 ஆயுர்வேதத் திணைக்களம்



1961 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்கச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட ஆயுர்வேத திணைக்களம் சுதேச மருத்துவ அமைச்சின் கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றும் பிரதான நிறுவனமாக செயற்படுகிறது.

**திணைக்களத்தின் நோக்கு**

ஆயுர்வேத மற்றும் சுதேச மருத்துவத்தின் ஊடாக யாவருக்கும் நலம்


**திணைக்களத்தின் அரும்பணி**

ஆயுர்வேத மற்றும் பாரம்பரிய சுதேச மருத்துவ முறையை பேணலும், அபிவிருத்தி செய்தலும் அத்துடன் அடையாளத்தை உறுதி செய்வதன் மூலம் யாவருக்கும் ஆரோக்கியத்தை பெற்றுக் கொடுப்பதற்காக தேசிய மட்டத்தில் நிகழ்ச்சித் திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தல்.

பிரதான தொழிற்பாடுகள்

- ஆராய்ச்சிகள், போதனைகள் இவற்றுக்காக வைத்தியசாலை மற்றும் ஏனைய பிரிவுகளையும் தாபித்தலும் பராமரித்தலும்.
- கருத்தரங்குகள், பயிற்சி வகுப்புகள் மற்றும் கற்கை நெறிகள் நடாத்துதல்.
- மருத்துவச் சிகிச்சை முகாம்களும் மற்றும் இலககிய நுண்ணாய்வுகளும் நடாத்துதல்.
- மூலிகை தாவர வளர்ப்பு, பேணல் மற்றும் விஸ்தரிப்பு நடவடிக்கைகள்.
- இலங்கை பூராவும் உள்ள பதிவு செய்யப்பட்ட வைத்தியர்களையும் மேற்பார்வையிடல் மற்றும் நிர்வகித்தலும்.
- ஆயுர்வேத வைத்தியசாலைகள், மத்திய மருந்தகங்கள், ஆயுர்வேத மருந்து உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் தனியார் ஆயுர்வேத கல்விப் பணிகளுக்கு சட்ட மற்றும் விதிகளை தயாரித்தல்.

**பிரதான தொழிற்பாடுகளை நிறைவேற்றும் நிறுவனங்கள்.**




- மருத்துவ சேவைகள் (பொரளை, கம்பஹ,கைதடி, மஞ்சத்தொடுவாய், அம்பாறை, திருகோணமலை)
- ஆராய்ச்சிப் பணிகள் (நாவின்ன பண்டாரநாயக ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனம், அம்பாநதோட்டை சமல் ராஜபக்ஷ ஆராய்ச்சிஆயுர்வேத வைத்தியசாலை, மிஹிந்தலை பாரம்பரிய ஆராய்ச்சி வைத்தியசாலை (நிர்மானிக்கப்படுகிரது).
- கல்வியும் பயிற்சியும் ( பாரம்பரிய வைத்தியத் துறை தொடர்பான தேசிய நிறுவனம்)
- மூலிகைத் தோட்டங்கள் (ஹல்துமுல்லை, பட்டிபொலை, கிராந்துருகோட்டை, பல்லேகலை, நாவின்ன, பின்னதுவ, கன்னெலிய).

**பொது நிர்வாகம்**

**01. தலைமை அலுவலகம்**

(அ) நிறுவனமும் நிருவாகப் பிரிவும்

(ஆ) கணக்கீட்டுப் பிரிவு

(இ) தொழில்நுட்பப் பரிவு

(ஈ) அபிவிருத்தி பிரிவு

(உ) பரீட்சைப் பிரிவு

## ஆயுள்வேத திணைக்களம்

### பிரதான அலவலகம்

1. நிறுவனமும் நிர்வாகப் பிரிவும்
2. தொழில்நுட்பப் பிரிவு
3. கணக்குப் பிரிவு
4. அபிவிருத்திப் பிரிவு
5. பரீட்சைப் பிரிவு

### ஆயுர்வேத போதனா வைத்தியசாலை

1. ஆயுர்வேத போதனா வைத்தியசாலை, பொரளை.
2. கம்பஹா விக்கிரம ஆராச்சி ஆயுர்வேத போதனா மருத்துவமனை (போதனா) – யக்கல
3. சித்த போதனா வைத்தியசாலை, கைதடி.
4. மஞ்சற் தொடுவாய் மருத்துவமனை
5. சித்த போதனா மருத்துவமனை – திருகோணமலை

### நாவின்ன ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவகம்

### ஆயுரவேத ஆராய்ச்சி வைத்தியசாலை

1. அம்பாந்தோட்டை ஆயுர்வேத ஆராய்சி மருத்துவமனை
2. ஆயுர்வேத வைத்தியசாலை, அம்பாறை

### பாரம்பரிய வைத்திய துறை தொடர்பான தேசிய நிறுவகம்

### மூலிகைத் தோட்டங்கள்

1. நாவின்ன
2. கிராந்துருகோட்டை
3. பல்லேகலை
4. ஹல்துமுல்லை
5. பின்னதூவ
6. பட்டிபொல
7. கன்னனலிய

### ஆயுர்வேத மருத்துவச் சபை

## (I). நிறுவன மற்றும் நிருவாகப் பிரிவு

### ஆட்சேர்ப்பு



- **2013 ஆம் ஆண்டின் ஆட்சேர்ப்பு**

  வைத்திய உத்தியோகத்தர்கள் - 183

  தொழிலாளர்கள் - 90

  ஏனைய திணைகளங்களில் வெற்றிடங்களை நிரப்புவதற்காக திணைக்களத்தில் தற்போது சேவைய்ல் உள்ள ஊழியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படடுள்ளன.

- **பயிற்சிகள்**

  திணைக்கள பதவியணியினருக்கு பயிற்சி பட்டறைகளுக்கு அவ்வப்போது சுதேச வைத்தியத் துறை தொடர்பான தேசிய நிறுவனத்தின் ஊடாக பயிற்சி திட்டங்கள் நடைமுறைப்படுகிறது.

## (II). அபிவிருத்திப் பிரிவு

### 2013 ஆம் ஆண்டின் அபிவிருத்திப் பிரிவின் முன்னேற்றங்கள்

- **மருத்தெண்ணை தேய்க்கும் நிகழ்ச்சியும் ஏனைய அரச நிகழ்வுகளும்**



2013.04.15 – ஒரே நொடிப் பொழுதில் ஒரே திசையைப் பார்த்து ஒரே குறிக்கோலுடன் யாவரினதும் உள்ளத்திற்கும் கொண்டு செல்லும் நோக்கில், பூரண அரச அனுசரனையுடன் சிங்கள தமிழ் புதுவருடத்தை அடிப்படையாகக் கொண்டு நடாத்தப்பட்ட **மருத்தெண்ணெய் அரச மகா உற்சவம் அதிமேதகு சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில்** கதிர்காமம் கிரிவெஹரையில் நடை பெற்றது.இது சம்பந்தமான விபரம் அமைச்சின் முன்னேற்ற அறிக்கை (இல 5.5) இன் கீழ் காட்டப்பட்டுள்ளது. இதன் செலவு 2013 இல் ரூ.மில் 1.8 ஆகும்.

- **நடமாடும் மருத்துவ சேவைகள்**

ஆயுர்வேத மற்றும் சுதேச சிகிச்சையின் ஊடாக உடல் மற்றும் மன நோயற்ற மக்கள் சமூகத்தை உருவாக்கும் குறிக்கோளுடன் நடமாடும் சிகிச்சை முகாம்கள் நடாத்தப்பட்டன.

அரச நிறுவனங்கள், விகாரைகள், தனியார் சங்கங்கள் மற்றும் பாடசாலைகளின் வேண்டுகோலிற்கு இணங்க சிகிச்சை முகாம்கள் ரூ 1.8 மில்லியன் ஆயுர்வேத ஆணையாளரின் அங்கீகாரத்துடன் வழங்கப்பட்டது.

- ஆயுர்வேத வைத்தியசாலைக்கு ஒப்படைத்தல் - சிகிச்சை முகாம்கள் 47
- மாகாண ஆயுர்வேத திணைக்களங்களிற்கு ஒப்படைத்தல் - சிகிச்சை முகாம்கள் 13

**ஆயுர்வேத மருந்து மற்றும் கஞ்சிவகைகளை பிரபல்லியப்படுத்தல்**

- போஷணையுள்ள மற்றும் சுதேச பான வகைகளிற்கு மக்களை பழக்கப்படுத்திக்கொள்ளும் குறிக்கோளுடன் அரச நிறுவனங்கள் மற்றும் ஏனைய குழுக்களின் விழாக்களிற்கு இலைக் கஞ்சி, மூலிகைப் பானங்கள் ஆயுர்வேத ஆணையாளரின் அங்கீகாரத்துடன் இலவசமாக பங்கிடப்பட்டது.



- **ஆயுர்வேத கண்காட்சி**

இலங்கைக்கு உரித்தான மூலிகை செடிகள் தொடர்பாக மக்களை அறிவூட்டும் குறிக்கோளுடன் கண்காட்சி தொடர்பாக




பெற்றுக்கொள்ளப்பட்ட வேண்டுகோளகளிற்கு இணங்க ஆயுர்வேத திணைக்களம் பிரதிநிதிப்படல்.

- **சீதாவக அபிமத புராவித்தியா,** கல்வி மற்றும் தொழில்நுட்ப காண்காட்சி.-2013
- **குமரி சிப்சுரு பிரபா வியாபார கணகாட்சி** வேல்ஸ் குமரி வித்தியாலயாம்
- **சித்த சிம்போஷியம் மற்றும் கண்காட்சி -2013,** யாழ்ப்பாணம் நாவக்கிரி மூலிகைத் தோட்டம்
- **ஆயுர்வேத எகஸ்போ கண்காட்சி 2013.**
- **தேசத்திற்கு மகுடம் கணகாட்சி 2013** ஹாடி பல்கலைக்கழகம் - அம்பாறை
- **எமது உரிமைகள் கலாச்சார கணகாட்சி,** குடாபுத்கமுவ ஸ்ரீ ராஜசிங்க தேசிய பாடசாலை முல்லேரியா
- **ஹரசர கல்வி மற்றும் வியாபார கண்காட்சி** பெலிகொட ஸ்ரீ தர்மாலோக வித்தியாலயம்.
- **ரெஜிநோல் குரே அமைச்சரின் மக்கள் சேவை.** பாணந்துறை மோதரவில விளையாட்டு மைதானம்
- **விலங்கியல் வாரம்,** இலங்கை மிருககாட்சிகள் திணைக்களம்.
- ரேண்டல்ஸ் கண்காட்சி மற்றும் கலியாட்டம், கண்டி கடம்பே விளையாட்டரங்கு.

**2013 ஆயுர்வேத திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட விசேட சந்தர்ப்பங்கள்**





**2013 தேசத்திற்கு மகுடம் கணகாட்சி**





அம்பாறை முதியோர் வாட்டுத் தொகுதி திறப்பு





2013 எண்ணெய் தேய்க்கும் அரச நிகழ்வு






EX-PO ஆயுர்வேத கண்காட்சி

- **மூலிகைத் தோட்டம் பார்வையிடல்**

  பாடசாலை பிள்ளைகள், உள்ளூர் சுற்றுலாபயணிகள், வெளியூர் சுற்றுலாப்பயணிகள், கல்விப் பணிகளுக்காக வருகிறவர்களுக்கு தோட்டத்தை பார்வையிடலாம்.



**மூலிகைத் தோட்டம் பார்வையிட வந்தோர்.**

| மூலிகைத் தோட்டம் | பின்னதூவ | பட்டிபொ | ஹல்துமுல்ல | பல்லேகலை | நாவின்ன | கிராந்துருகோட்டை |
|---|---|---|---|---|---|---|
| **பாடசாலைகள் எண்.** | 15 | 3 | 60 | 40 | 4 | 2 |
| **கல்விச்சுற்றுலா வந்நவர்கள் எண்ணிக்கை.** | 346 | 422 | - | 352 | 69 | 55 |
| **ஆராய்ச்சிப் பணிகளுக்காக வந்தவர்கள் எண்ணி.** | 3 | 21 | 12 | 97 | 25 | - |
| **வெளிநாட்டு சுற்றுளாப் பயணிகள் எண்ணிக்கை** | 16 | 0 | 11 | 15 | 5 | - |
| **உள்ளூர் சுற்றுளாப் பயணிகள் எண்ணிக்கை** | 141 | 0 | 83 | 157 | 8 | - |
| மொத்தம் | 521 | 485 | 60 | 661 | 104 | 57 |

- **இலைக் கஞ்சி உபகரணங்கள், மூலிகைத் தோட்டப் பொருட்கள், மற்றும் புத்தக பொதிகள் வழங்கல்.**
  - கிறிஸ்த்துராஜ வித்தியாலயம்.
  - சந்திஜோதி விகாரை, மாதிவேல, கோட்டை.
  - ஸ்ரீ ரதனஜோதி பிரிவென, ஸ்ரீ சுபத்திராதாமய, நிகபொத, ஹபுத்தலை.
- **புத்தகப் பொதிகள் வழங்கல்**

ஆயுர்வேத திணைக்களத்தின் நிறைவேற்று அதிகாரிகளுக்கு ஒரு புத்தகப் பொதிப் படி வழங்கல், கந்துரட்ட சுதேச வைத்திய வித்தியாலயம், கோட்டை ஆனந்த மகளீர் வித்தியாலயம், மத்திய மாகாண ஆயுர்வேத திணைக்களம், சப்பரகமுவ மாகாண பிரதான அமைச்சு, விஜய குமாரதுங்க 25 வது நினைவு தினம், எண்ணெய் தேய்க்கும் அரச நிகழ்வில் கலந்து கொண்ட பிரமுகர்களை வரவேற்றல்., சுதேச வைத்திய அமைச்சு மற்றும் சுதேச வைத்திய பிரதி அமைச்சர் செயலாளர்., கும்புக்கட்டே மத்திய மகா வித்தியாலயம், கும்புக்கட்டே, தீபானி மகா வித்தியாலயம்., ஆயுவேத சாஸ்திரி சான்றிதழ் வழங்கும் பிரதான உற்சவம்.

- **இலவசமாக மூலிகைக் கன்றுகள் வழங்கல்.**

சுதேச மூலிகைப் செய்கையை விரிவாக்கும் குறிக்கோலுடன் பாடசாலை, அரச நிறுவனங்களின் வேண்டுகோலிற்கு இணங்க இலகு முறையில் மற்றும் இலவசமாக மூலிகைக் கன்றுகள் 25 படி ஆயுர்வேத ஆணையாளரின் அனுமதியுடன் வழங்குதல் மூலிகைத் தோட்டங்களினால் வழங்குவதற்கு மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படுகினறன.




- **நிர்மானங்கள், திருத்தங்கள் மற்றும் பராமரிப்புப் பணிகள்.**

2013 ஆம் ஆண்டில் நிர்மானிப்பு, திருத்தங்கள், மற்றும் பராமரிப்புப் சேவைகள் கீழ் காணும் முறையில் நடைபெற்றது.

| நிறுவனங்கள் | விபரம |
|---|---|
| பிரதான அலுவலகம் சாரதிகள் ஓய்வறை | மதிப்பிடப்பட்ட தொகை: ரூ.மில் 2.99 (வட் உடன்)<br>நிர்மான முன்னேற்றம்: 60% |
